7. அறிவிப்பு

பேரவை அலுவல்களில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று நண்பகல் கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி 11-4-2002 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 45, 3, 32 ஆகியன 15-5-2002 அன்றும், 15-5-2002 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 4, 11-4-2002 அன்றும் எடுத்துக்கொள்ளப்படும். 11-4-2002 தேதியில் வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. மேலும் அன்று மானியக் கோரிக்கைகளின் மீதான வாக்கெடுப்புக்குப் பின்னர் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப்படும்.

11-4-2002 மற்றும் 22-4-2002 முதல் 17-5-2002 வரை எடுத்துக்கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 5-4-2002 அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் இச்செயலகத்தில் அளிக்கப்பெற வேண்டும்.

அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள 25-4-2002 (வியாழக்கிழமை) மற்றும் 25-5-2002 (சனிக்கிழமை) ஆகிய நாட்களில் பேரவை கூடும்.

6. வரவு-செலவுத் திட்டம், 2002-2003,
பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக அரசன் 1.30 மணிக்குப் பேசி முடிக்கிறீர்கள்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுகிற வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுவதற்கு முன்னாலே என்னுடைய பிற்படுத்தப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய இரண்டு கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.